


# சபேசன் 50

20.03.2014



இலங்கை – அம்பனை - தெல்லிப்பழை
இடதுசாரி அரசியல் செயற்பாட்டாளர், தொழிற்சங்கவாதி
**அமரர் கந்தப்பிள்ளை நாகலிங்கத்தின்**
கனிஷ்ட புத்திரன்

மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவர்
'புதுசு' (இலங்கை) ஆசிரியர்களில் ஒருவர்
'பனிமலர்' (லண்டன்) ஆசிரியர்களில் ஒருவர்
சஞ்சிகைகள், நூல்கள் வெளியீட்டாளர்
'இனி வரும் காலம்' கவிதைத் தொகுதியின் ஆசிரியர்
ஈழ, இடதுசாரி அரசியற் செயற்பாட்டாளர்
எழுத்தாளர் – கவிஞர்

# திரு நாகலிங்கம் சிறிசபேசன்

அவர்களின்

## 50ஆவது அகவைப் பூர்த்தியின் போது வெளியிடும் கையேடு

சகோதரர்களின் வெளியீடு
'Arivakam', 13 Arcus Road, Bromley, Kent BR1 4NN

# நாகலிங்கம் சிறிசபேசன்

தந்தை: அமரர் கந்தப்பிள்ளை நாகலிங்கம்
தாயார்: அமரர் சிவகெங்கை நாகலிங்கம்

பிறந்த திகதி: 20 மார்ச் 1964
பிறந்த இடம்: இணுவில் வைத்தியசாலை

சகோதரர்கள்: சிறிகெங்காதரன்
சிறிபாலகெங்காதரன்
சிறிகெங்காதேவி
சிறிபாலகெங்காதேவி

கல்வி: சேர் கனகசபை வித்தியாசாலை - பன்னாலை
மகாஜனக் கல்லூரி - தெல்லிப்பழை

லண்டன் வருகை: 1986

திருமணம் 09.02.1997

மனைவி: மலர்விழி

மகள்: பொன்னி

மகன்: பரிதி

ஆசிரியர் **புதுசு**

(உறுப்பினர்) **சுவர்**
**பனிமலர்**

வெளியீட்டாளர்:

**இவர்கள்**
(மகாஜன உயர்தர மாணவர்)
**இரண்டாவது சூரிய உதயம்**
(சேரன்)
**அமைதி குலைந்த நாட்கள்**
(புதுசு கவிதைகள்)

ஆக்கம்: **இனி வரும் காலம்**
(கவிதைத் தொகுதி)

அரசியல்: **தமிழீழத் தேசிய விடுதலை முன்னணி (NLFT)**

*****

# தலைமைத்துவ இயல்புகள் கொண்ட என் மாணவன்

ஒரு வேலி மாத்திரம் அவர்கள் இல்லத்தையும் பாடசாலையையும் பிரிக்கிறது. ஆனால் அவர்கள் உள்ளத்தைப் பாடசாலையிலிருந்து பிரிப்பதற்கு எந்த வேலியுமே இருந்ததில்லை. அவர்களுக்கும் பாடசாலைக்கும் ஒரு பொதுவான கிணறு. அந்த நீரினையே இரு சாரரும் உட்கொண்டமையால்தானோ அக்குடும்பத்தினருக்குப் பாடசாலையிலும் அதன் ஏனைய இயங்கு கூறுகளிலும் இத்தனை பாசத்தையும் பற்றினையும் பொழிய வைத்தது. சபேசன் இந்தக் குடும்பத்தில் உதித்தவன். தாயின் பாலூட்டலின் போதே, பாடசாலையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுப்பப் படும் பல்வேறுவகை ஓசை ஒலிகளைக் காற்று அவன் காதுகளில் கொண்டு சேர்க்க பாடசாலை பற்றிய உணர்வு அவன் குருதியூற்றில் கலந்து விட்டது. நிரந்தரமாய் நின்று விட்டது. ஆகவே பாடசாலை மேல் அவனுக்குள்ள விசுவாசம், மோகம் பற்றிச் சொல்லித் தான் தெரிய வேண்டும் என்பதில்லை.

பெற்றோர்களே பிள்ளைகளின் முதலான,முதன்மையான ஆசிரியர்கள் என்பார்கள். “ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே, சான்றோன் ஆக்குதல் தந்தையின் கடனே” என்கிறது ஒரு பழைய தமிழ் பாடல். ‘புறம்’ என்பது நாம் வாழ்கின்ற சமூகச் சூழல். ஒரு தாய் தனது குலக் கொழுந்தினை சமூத்தின் ஒரு கூறாகச் சிறப்புறச் செய்றபடக்கூடிய வித்திலே தயாரப்படுத்தியே சமூகத்திற்கு வழங்குகிறாள். அதே போன்று அக்குழந்தையின் ஆழுமையை விருத்தியுற வைத்து ‘அவையத்தில் முந்தி இருக்க வைப்பது’ தந்தையினுடைய முயற்சிப் பேறாகும். தொழிற் சங்கவாதியாகவும், சமூகநீதிபேணுபவராகவும் விளங்கிய தந்தையார் நாகலிங்கத்தின் அரவணைப்பிலும், தாயாரின் விருந்தோம்பல் திறன், எவருடனும் அனுசரித்து இயம்பு நடத்தை,என சபேசனின் ஆழுமை விருத்திக்கான தளம் அமைக்கப்பட்டு பாடசாக்கு சென்றவன் கல்வி அறிவு வளர வளர சிறந்த மாணவனாக மாத்திரமல்லாது, நற்பண்பாளனாகவும், தலை-மைத்துவப் பண்பிலே உயரந்தவனாகவும் மிளிரமுடிந்தது. அதிபர் ஜெயரத்தினம் மாணவர் பின்பற்றக் கூடிய உதாரண புருடராக உயர்ந்து நின்றவர். சபேசனின் ஆதர்ஷ புருடராக அவர் நின்றது வியப்புக்குரியதல்ல. கவிஞர் கதிரேசர் பிள்ளை, விநாயகரத்தினம், அம்பலப்பிள்ளை போன்றோர் ஆரம்பித்து வைத்த தமிழ் அறிவு மேற்கொண்டு வித்துவான் சிவபாதசுந்தரம், சண்முகசுந்தரம் மயிலங்கூடலூர் நடராசன் ஆகியோரின் நெறிப் படுத்தலால் பெரு வளர்ச்சி பெற்றது.

சபேசனின் இலக்கிய வாஞ்சைக்கு வித்தாயது. தோழர் வி. பொன்ப்பலத்தினோடு ஏற்பட்ட தொடர்பு அவனது சமூகப் பார்வையை, நாட்டுப் பற்றுணர்வை மிக விசாலிக்க வைத்தது.

சபேசன் வளர்ந்தான். சகல திறனும் மிளர்ந்த ஒரு மாணவனாக உயர்ந்தான். மாணவர்கள் வழிகாட்டியாகக் கொள்ளக் கூடிய தலைமைத்துவ இயல்புகள் கொண்டவனாக எழுந்தான். சில சமயங்களிலே பாடசாலை வளர்ச்சி கருதியும், மாணவர் நலன் கருதியும் நிர்வாகத்துடன் முரண்படுகின்ற அளவினுக்கு நிமிர்ந்து நின்றான். அவனது கலை இலக்கிய ஆர்வம் சகமாணவர்கள் சிலருடன் இணைந்து சஞ்சிகை ஒன்றினை நடத்த வைத்தது. அம்பனைக் கலைப்பெருமன்றத்தின் ஆணிவேர்களில் ஒன்றாகத் துலங்க வைத்தது.தான் வாசித்து இன்புறுவது மாத்திரமல்லாமல் ஏனையோரும் அதன் சுவையினை நுகரவேண்டும் என்ற பேராசை அவனிடம் அபரிமிதமாக இருந்தமையை பேராசிரியர் சுப்பிரமணிய ஐயர் அவர்கள் என்னிடம் பெரிதும் பாராட்டிப் பேசியுள்ளார்கள். தான் தெல்லிப்பழையில் வசித்த காலை வாராவாராம் சபேசன் கட்டுக்கட்டாகப் புத்தகங்கள் கொண்டு வந்து தருவான் என ஐயர் அவர்கள் கூறினார்கள். இதனை நான் அனுபவ பூர்வமாகவும் உணர்ந்துள்ளேன்.

காலம் செய்த கோளாறு கரணமாக நான் கனடாவுக்கும் சபேசன் இங்கிலாந்திற்கும் புலம் பெயர வேண்டி வந்தது. தாயகத்திலிருந்து புகலிடம் தேடிச் சென்றோம் எனினும் தாயகத்தில் இருந்ததிலும் பார்க்க நமது உறவு பன்மடங்கு அதிகரிக்கவே செய்தது. நான் பல முறைகள் இங்கிலாந்து சென்றுள்ளேன். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எனது உறவினர்கள் வீடு தவிர்ந்து வேறு வீடுகளில் தங்க வேண்டுமென வந்தால் நான் தேர்வு செய்யும் வீடுகளிலே முதன்மையானது சபேசனது வீடு ஒன்றாகும். அந்த அளவினுக்கு விருந்தோம்பலில் அவனது மனைவி கைதேர்ந்தவராக விளங்கினார். நான் வீடேகும் பொழுது சபேசனுடைய அன்பளிப்பாக ஒரு சில புத்தகங்கள் என் கைகளில் இருக்கும். அது மாத்திரமா? இலண்டனில் இருந்து யாரா-ாயினும் எனக்குத் தெரிந்தவர்கள் ரொறன்ரோ வருவார்களாயின் அவர்கள் கட்டாயமாக சில நூல்களைக் கொண்டு வந்து தந்து சபேசன் கொடுத்தார் என்பார்கள். சபேசனிடம் நான் கண்ட இன்னொரு விசேட குணம் இலக்கியத் திறனுடையோரை இனம் கண்டார் என்றால் அவர்களை ஊக்கப் படுத்தி மேன்மேலும் வளர உதவுவதுடன் அவர்கள் ஆக்கங்களுக்குத் தாராளமாக பண உதவி புரிதலாகும். இத்தகைய நற்பண்பினை நாம் பலரிடம் காண்பது அரிது. கவிஞர் சு. வில்வரத்தினம் அவர்களின், "உயிர்த்தெழும் காலத்திற்காக" என்ற கவிதை நூலின் பிரசுரத்திற்காக சபேசன் அளித்த நிதி உதவி பற்றி கவிஞர் நன்றி நவிந்துள்ளார். இலண்டனில் புகலிடம் பெற்றபோதிலும் அவனது இலக்கியத் தாகத்திற்குத் தீனி போட வேண்டும் என்ற ஆவல் " பனிமலர்" என்ற அற்புதமான சஞ்சிகையை பிரசுரிக்க வைத்தது. நல்ல தரமான சஞ்சிகை எனப்

பல்லோரது பாராட்டினை அது பெற்றது உண்மை ஆனால் தொடர்ந்து நடத்துதற்குரிய பெருளாதாரத்தினை அது ஈட்டித் தரவில்லை என்பது பேருண்மை. தொடர்ந்து நஷ்டப் படுதல் என்பது சாத்தியமற்றது. ஆகவே சஞ்சிகைப் பிரசுரம் தற்காலிகமாக நிறுத்தப் பட்டது என்றே கூறுவேன். அவனது உள்ளதில் முடங்கிக்கிடக்கும் சஞ்சிகை உணர்வு ஆர்த்து எழும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. எப்போ என்பதே கேள்வி. அவனது இலக்கிய திறனை அவனது மகளில் கண்டுள்ளேன்.

அவர்கள் குடும்பம் சிறப்புற வாழ என் வாழ்த்துகள். ஐம்பது ஆண்டுகள் காணும் என் அன்பிற்குரிய சபேசன் இன்று போல் என்றும் நிறைவான வாழ்க்கை மேற்கொள்ள வாழ்த்துகிறேன்.

பொ. கனகசபாபதி

---

பொன்னையா கனகசபாபதி இன்றும் மகாஜனாவின் அதிபராக அறியப்படுபவர். கனடாவில் வதியும் இவர் தொடர்ந்து நிறையவே எழுதி வருகிறார். சபேசனின் வளர்ச்சியின் ஆரம்பத்தில் தட்டிக் கொடுத்த பெருமதிப்புக்குரிய அதிபர்

**********

மிகப் 'புதுசான' சாட்சியாய் சபேசனையும் இங்கு அழைக்கலாம். 'மாணவரின் முயற்சிகளை தட்டிக்கொடுத்து உற்சாகப்படுத்துவது மகாஜனப் பாரம்பரியம்' என்று தன் அனுபவத்தின் அடியாகச் சபேசன் தெரிவிக்கும் கருத்து நம் கவனத்துக்குரியது. ஐந்தாவது வகுப்பிலேயே தன் முதற் கவிதையை எழுதக் காரணமான தமிழாசிரியர், பின்னாளில் கையெழுத்துச் சஞ்சிகை ஆசிரியராகத் தம்மை வளர்த்த ஆசிரியர், திரு ச விநாயகரத்தினம், இந்த முயற்சியை வகுப்பறைக்கு வந்தே உற்சாகப்படுத்திய அதிபர் திரு பொ கனகசபாபதி எனச் சபேசனின் மனப்பதிவு நீளும்.

---

பேராசிரியர் நா சண்முகலிங்கம் - பாவலர் நினைவுப் பேருரை 1988

# "ஆளும் வளரணும் அறிவும் வளரணும் அதுதாண்டா வளர்ச்சி"

## அகவை 50 இனை எட்டும் சகோதரன் சபேசன்

ஒரு நாள் கழிந்து செல்லும்போது எமது ஆயுளும் ஒரு நாளினால் அதிகரித்தே செல்கிறது. இது மனித ஆத்மாக்களுக்கு மட்டுமல்லவே இப் புவியில் அவதரித்த சகல ஜீவராசிகளினதும் ஆயுளும் அவ்வாறுதான். அப்படி எனில் அகவை ஐம்பது என்பது வெறும் கணக்கெடுப்பென்றாகிறது. மனித ஆயுள் அவ்வாறான எண்ணிக்கை என்றாகிவிட்டால் மனிதனுக்கும் இதர உயிர்களுக்கிடையிலான வேறுபாடு என்ன? எனவே அறிவே அதன் அளவுகோலாகிறது.

எனது நெருங்கிய குடும்பத்திற்கு வெளியில் உள்ள நான் மிகவும் நேசிக்கின்ற ஒரு குடும்பம் ஒன்று இருக்குமெனில் அது சிறீகெங்காதரன் அவர்களின் குடும்பம் ஒன்றே ஆகும். அக் குடும்பத்தின் செல்லப்பிள்ளைதான் சபேசன். சுமார் 5 வயதிலிருந்து அவனது வளர்ச்சியை அவதானித்த ஒருவனாக நான் உள்ளேன். குடும்ப வருமானம் சொற்பமாக இருந்த போதிலும் அறிவுத் தேடலுக்காக செலவிடுவதற்கு என்றுமே பின்னிற்காத ஓர் குடும்பம் அது. வறுமை அறிவுத் தேடலை தடுத்துவிடப்போவதில்லை. நமது முன்னுரிமை தொடர்பான தெரிவுகளே அதனைத் தீர்மானிக்கிறது. ஒரு பிள்ளையின் வாழ்வு சிறப்பாக அமைய வேண்டுமெனில் அதன் ஆரம்ப வாழ்வு இலட்சியப் பயணமாக மாற்றப்பட வேண்டும். இந்திய முன்னாள் அரசுத் தலைவர் அப்துல் கலாம் அவர்கள் குறிப்பிட்டது போல கனவு காணவேண்டும். இதனையே சபேசனின் வளர்ச்சியில் எனது பிரதான அவதானிப்பு ஆகும். கல்வி அறிவிற்கு எல்லைகள் இருக்கலாம் ஆனால் மனித அறிவு வளர்ச்சி விசாலமானது. இதனால்தான் ஆழமான கல்வி அறிவுள்ளவர்கள் மத்தியிலும் அறிவுசால் மனிதர்களால் ஒருசேர சஞ்சரிக்க முடிகிறது. இதனை நான் சபேசனின் வாழ்விலும் காண முடிந்தது.

' இனி வரும் காலம்' என்ற சிறிய கவிதைத் தொகுதி 1986 இல் வெளிவந்திருந்தது. அதில் வெளிவந்த முன்னுரை அவ் இளைஞனின் மனதில் எழுந்த உணர்வு அலைகளை அல்லது எதிர்காலம் பற்றிய கனவுகளை முன் வைத்தது.

**“.... கவிதையையும், இலக்கியத்தையும் விடவும் மக்களின் விடுதலையை நான் நேசிக்கிறேன். ஜனநாயகப் புரட்சியா? சோசலிசப் புரட்சியா? என்று தர்க்கித்துக் கொண்டிருந்தவர்களில் சிலர் குண்டடிபட்டுச் செத்துப் போகிறார்கள் எனக் கவிதை எழுதுவதை விட அந்தப் பீரங்கிக் குண்டுகளுக்கு பதிலடி கொடுக்கும் அரசியல் இயக்கம் ஒன்றினை அமைப்பதனையே சரியானதாகவும், அவசியமானதாகவும் கருதுகிறேன்....”**

அன்று இயக்கங்களின் பின்னால் பலர் இணைந்து தொண்டனாக செல்ல துடித்திருந்த வேளையில் அரசியல் இயக்கம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்ற சிந்தனை மிகவும் மாறுபட்டது மட்டுமல்ல மாற்றத்தை தலைமை தாங்கவேண்டும் என்ற உள்ளுணர்வு வெளிப்படுத்தப்படுகிறது. இவை மக்கள் மீதும், தனது அறிவின் மீதான தன்னம்பிக்கையின் வெளிப்பாடாகவே காண்கிறேன். **வரலாற்றுக் கடமைகளில் இருந்து நாம் வழுவிப் போகிறபோது வரலாறே எம்மிடமிருந்து நழுவிவிடுகிறது** என குறிப்பிடுவது சமூகத்துடன் தனது கடமையை இணைப்பதன் அவசியத்தைக் குறிப்பிடுவதாகவே உள்ளது. சமீப காலமாக தற்போதைய அரசியல் நிலமைகள் குறித்து விவாதிக்கப்படும்போது சபேசனின் பங்களிப்புகள் வரலாற்றுப் பாத்திரத்தினை உணர்த்துவதாகவே உள்ளது.

இன்றைய கால கட்டத்தில் பல்வேறு அரசியல் அமைப்பகளிலும், மற்றும் சமூக கலை இலக்கிய தளங்களிலும் முன்னணி வகிக்கும் பலர் சபேசனின் நண்பர்களாக இருப்பதை அவதானிக்கிறேன். இவை ஒரு மனிதனின் ஆளுமையை மதிப்பிடப் போதுமானவை. சபேசனின் வாழ்வை அவதானிக்கும்போது அவற்றில் மிகவும் மகிழ்ச்சி கொள்ளும் ஒருவனாக நான் என்றும் உள்ளேன். அறிவில் காணப்படும் முதிர்ச்சி அது அனுபவத்தின் விளைபொருளாக காணப்படுகிறது. என்றும் மகிழ்ச்சியோடு பணி தொடர மனமுவந்து வாழ்த்துகிறேன்.

இளவாலை விஜயேந்திரன் என்ற இளம் கவிஞன் தனது கவிதை எழுத்துகளில் நிறைய பாதிப்புகளை ஏற்படுத்தியதாக சபேசன் குறிப்பிடுகிறார். எனவே அவரது கவிதையின் சில வரிகளோடு முடிக்கிறேன்.

நான் ஆசைப்படுகிறேன்
எங்களின் கிராமங்களின் மீது
விமானங்கள் குண்டு வீசுகிற
இன்றைய நாட்களிலும்
உங்களது மொழியில் பேச
நான் ஆசைப்படுகிறேன்!
உங்களது பச்சையரிசிச் சோற்றை,
ஈரப்பலாக்கறியை
அன்பான உபசரிப்பை
அதனிலும் மேலான நட்பை
அனுபவிக்க நான் ஆசைப்படுகிறேன்!

நாணற் புதரருகே
நீரோடும்
உங்களது ஆறுகளில்
நீந்தி மகிழ
நான் ஆசைப்படுகிறேன்!

என்போல் ஆசையுள்ள
உங்களது நிலையும்
இதுபோல்தான்
ஆசை
வெறும் ஆசை

கொழும்புத் தெருக்களில்
வெட்டியும் எரித்தும்
கொடுஞ்செயல் புரிந்த
உம்மவர் போலவே
அனுராதபுரத்து வீதிகளெங்கும்
எம்மவர் தீர்த்த வேட்டுகள் கேட்டு
பெருந்துயர் கொண்டோம்!

மனித உணர்வை
காலில் மிதிக்கும் இன்றைய பொழுதில்
முணுமுணுக்க மட்டுமே
முடிகிற தெனக்கு

(ஜனவரி 1986)

தோழமையுள்ள வி. சிவலிங்கம்

எமது இலக்கியப் பாரம்பரியத்தின் மற்றோர் படைப்பாளியான திரு. நா. சபேசன் தலைப்பையும் கருத்துரைத்து, நினைவுப் பேருரை வெளியீட்டுக்கு நிதியையும் லண்டனிலிருந்து அனுப்பினார். வெளியீட்டுக்கு நிதி வழங்கி, ஒரு புதிய மரபைத் தோற்றுவித்த நா. சபேசனுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

க.நாகராசா, அதிபர், மகாஜனக் கல்லூரி 24.06.1988

# அன்புத் தம்பி – நாகலிங்கம் சிறிசபேசன் 50

அம்பனை – தெல்லிப்பளையில் ஓர் இலட்சியவாதியான அமரர் நாகலிங்கம் அவர்களின் கனிஷ்ட புத்திரனாகவும் பிறர்க்காக, தன்னை உருக்கும் மெழுகுதிரி போன்ற பண்பு கொண்ட, சமதர்மவாதி திரு சிறிகெங்காதரன் அவர்களின் தம்பியாகவும் ஐம்பது ஆண்டுகளுக்குமுன் பிறந்த சபேசன், இன்றைக்கு முப்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்பு எனது மாணவன் ஆக இருந்தார். இதனை நினைத்து மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன்.

சபேசன் அவர்கள், தெளிவான சிந்தனையும் எதையும் நடுநிலையில் நின்று ஆராயும் திறனும் உடையவன். அரசியல், இலக்கியம், சமூக சிந்தனை என பல துறைகளில் ஆழுமைமிக்க எழுத்தாளராகவும், பேச்சாளராகவும் பலராலும் மதிக்கப்படும் சபேசன், தான் கொண்ட கொள்கையில் உறுதியானவர். தனது கருத்தைக் கூறுவதற்குப் பின்நிற்காதவர்.

எனது மாணவனாக இருந்தும் சபேசனிடம் எத்தனையோ விடயங்களில் ஆலோசனை பெற்றதுண்டு. “நெற்றிக்கண் காட்டினாலும் குற்றம் – குற்றமே” என்ற நக்கீரனின் பரம்பரைக்குரிய பண்புகள் கொண்டவர் சபேசன். என்னிடம் எத்தனையோ தடைவைகள், சேர் நீங்கள் அதில் பிளை விட்டீர்கள், இதை இவ்வாறு செய்தது தவறு, என்று சுட்டிக்காட்டி, எனது அன்பையும் பெருமதிப்பையும் பெற்ற, ஓர் அன்பான தம்பியும் நன் மாணாக்கனும் ஆவார்.

இத்தனை சிறப்புக்களையும் உடைய சீராளனை, மாணவனாகப் பெற்றது மகாஜனக் கல்லூரிக்குப் பெருமை தருவதாகும்.

தம்பி சபேசனின் ஐம்பதாவது பிறந்த நாளில் அவரும் அவரின் குடும்பமும் சகலதும் பெற்று நீடூழி வாழ, எல்லாம்வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

சுப்பிரமணியம் சிறிகாந்தலிங்கம்
சட்டத்தரணி

---

திரு சுப்பிரமணியம் சிறிகாந்தலிங்கம், சட்டத்தரணி. ஆசிரியராக இருந்தவர். திரு சுப்பிரமணியம் சிறிகாந்தலிங்கம், சட்டத்தரணி. ஆசிரியராக இருந்தவர். இலங்கையில் வீரகேசரி பத்திரிகையின் ஆசிரிய பீடத்தில் இருந்தவர். சமூக சேவையாளர். அரசியலில் அக்கறை கொண்டவர். லண்டன் மகாஜனாவின் முக்கியமான செயற்பாட்டாளர்.

# எல்லாமே நேற்று நடந்தவை போலுள்ளது

சபேசனுக்கு ஐம்பது வயது. எனக்கு அவனை ஏறத்தாழ முப்பத்தியேழு வருடங்களாகத் தெரியும். அதாவது அவனது பதின்மூன்று வயதிலிருந்து தெரியும். அப்போது எனக்கு பதினைந்து வயது. நானும் சபேசனும் மகாஜனாக்கல்லூரியில் ஒரே காலகட்டத்தில் படித்தவர்கள். ஆனால் ஒரே வகுப்பில் படிக்கவில்லை. ஒரே வகுப்பறையில் அமர்ந்திருக்காத என்னையும் அவனையும் முடிச்சுப்போட வைத்தது மகாஜனாக்கல்லூரி மாத்திரமல்ல, அப்போது எம்மிடையே அந்த காலகட்டத்தில் நிலவிய கலை, இலக்கிய ஆர்வமுமே.

ஒரு நாலு வருட காலமாவது (1977-1981) சபேசனது மாணவப் பருவத்தினை மிக அருகிலிருந்து பார்த்திருக்கிறேன். தயக்கமிலலாத, கூச்ச சுபாவமில்லாத அவனது இயல்பு எல்லோரிடமும் தோழமையுடன் பழக வைத்தது. எனக்கு தெரிந்த வரையில் மகாஜனாக்கல்லூரியில் தனது வகுப்பு மாணவர்களைவிட, தன்னைவிட வயது கூடிய, வயது குறைந்த மாணவர்களுடனும் அவன் அன்பாக பண்போடு பழகினான். பாடசாலை வாழ்வில் மாணவர்களிடையேயும் மாணவர்கள் - ஆசிரியர்களிடையேயும் கருத்து வேற்றுமைகள் தோன்றி மறைவது இயல்பே. அவ்வாறான சூழ்நிலைகள் தோன்றும் போதெல்லாம் அவன் யாரிடமும் நீண்ட நாட்கள் கோபித்துக் கொள்ளவதில்லை. எதனையும் மனதில் வைத்து அவனுக்கு அறுக்கத் தெரியாது. எல்லோரிடமும் கலகலத்து சிரித்துப் பேசி எப்போதும் போலவே சகஜமான சூழலை பேணுவான். பொதுவாக எல்லா ஆசிரியர்களுக்கும் அவன்மீது அளவுக்கதிகமான மதிப்பு இருந்தது. அந்த மதிப்புக்கு மகாஜனாக்கல்லூரியின் வளர்ச்சிக்கு காலங்காலமாக உரமிட்டுக் கொண்டிருக்கும் அவனது குடும்பப்பின்னணியும் முக்கிய காரணமாக இருந்தது என்பதை நான் பின்னர் தெரிந்து கொண்டேன். பெயரளவில் கல்லூரியில் அவனை அதிகமானோருக்கு தெரிந்திருந்தது. கல்லூரியில் நெருக்கமானவர்களை மதிய உணவு இடைவேளையிலும் பிற்பகலிலும் மகாஜனாக்கல்லூரியின் அருகோடிருந்த தனது வீட்டிற்கு அடிக்கடி அழைத்துச் சென்று உபசரிக்கவும் தயங்கமாட்டான்.

சிறுவயதிலிருந்தே சபேசன் தினசரிப்பத்திரிகைகள், சஞ்சிகைகள், கதைப்புத்தகங்களென எல்லாவற்றையுமே தீவிரமாக வாசிப்பவனாக இருந்தான். அவனது தந்தை, பின்னர் அவனது மூத்த அண்ணர் கெங்காதரன் ஆகியோர் இடதுசாரி அரசியல் பின்புலம் கொண்டவர்களாக இருந்ததால் அவர்களுக்கும் தினசரிப் பத்திரிகைகளை, சஞ்சிகைகளை, புத்தகங்களை, துண்டுப் பிரசுரங்களை வீட்டுக்கு எடுத்து வந்து வாசிப்பதில் நிறைய ஈடுபாடு இருந்ததாம். இதுவே அவனது வாசிப்புப் பழக்கத்திற்கு அடிகோலியதென அவன்

என்னிடம் ஒருதடவை கூறியிருக்கிறான். இந்த பழக்கம் அவனை எழுதவும் தூண்டியது. எழுத்துலகில் ஏதாவதை சாதிக்க வேண்டுமென்று அவன் கனவும் பேரார்வமும் கொண்டிருந்தான். இதனால் அதே ஈடுபாடு கொண்டுள்ளவர்களோடும் அவன் இடையறாது உரையாடினான். இவ்வாறே 1979களில் மகாஜனாக்கல்லூரியின் உயர்தர வகுப்பு மாணவர்களாக இருந்த என்னுடனும் மற்றும் விஜயேந்திரன், ரவி ஆகியோருடனும் இறுக்கமான உறவைப் பேணினான். எமது நால்வரினதும் கலை, இலக்கிய உறவின் வளர்ச்சிப் பரிமாணமே 1980 ஆண்டில் 'புதுசு' என்ற காலாண்டு கலை, இலக்கிய சஞ்சிகையை வெளிக்கொணர்வதற்கு காரணமாயிருந்தது.

'புதுசு' ஆசிரியர் குழுவிலிருந்த நால்வருமே மாணவர்களாக இருந்ததினால் ஒரு சஞ்சிகையை – அதுவும் ஒரு கலை, இலக்கிய சஞ்சிகையை - அச்சில் வெளியிடுவதற்கான பணபலமற்றவர்களாவே இருந்தோம். உறங்குவதற்கு வீடு, உண்பதற்கு உணவு, உடுப்பதற்கு உடை, பாடசாலை தேவைகள், ரியூசன் காசு என இன்னோரன்றவைகளுக்கெல்லாம் பெற்றோரை தங்கியிருந்த மாணவர்கள், நாங்கள். படிப்பு என்பதை கடிவாளமாக அணிவித்து, எங்களை நாளாந்தம் பாடசாலைக்கும் ரியூசனுக்கும் அனுப்பிக்கொணடிருந்த பெற்றோர்களிடம் 'பத்திரிகை அடிக்கப்போகிறோம்' என்று சொன்னால் 'இது உருப்படுகிற காரியம் இல்லை' என்றுதான் சொல்லியிருப்பார்கள்.

அக்காலகட்டத்தை பேச்சுத்தமிழில் புரிய வைப்பதானால் 'ஒரு சதத்திற்குக்கூட வழியில்லாமல் நாங்கள் இருந்தோம்' என சொல்லலாம். விளம்பரங்கள் வாயிலாகவும் மற்றும் தனிநபர்களின் நன்கொடைகள் மூ லமாகவுமே அக்காலகட்டத்தில் 'மல்லிகை' 'அலை' 'சமர்' போன்ற சிறு சஞ்சிகைகள் வெளிவந்து கொண்டிருந்தன. அச்சிறு சஞ்சிகைகளின் வடிவமைப்பின் மீது எங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பால், அந்த வழியையே நாங்களும் பின்பற்ற நினைத்தோம். சஞ்சிகை அல்லது பத்திரிகை ஒன்றினை வெளியிட முன்னர் பணம் சேகரித்தலென்பது மிகவும் கடினமான பணி. விளம்பரங்கள் வழங்குபவர்கள், நன்கொடைகள் தருபவர்கள் எப்படி எம்போன்ற மாணவர்களை நம்புவார்கள்? அதிலும் நாங்கள் வெறும் இளசுகள். எமது வயதுகள் பதினாறிலிருந்து இருபது வரை. மகாஜனாக்கல்லூரி மாணவர்களாக இருந்தபோதிலும் மகா ஜனாக்கல்லூரி சார்பாக நாங்கள் புதுசுவை ஆரம்பிக்கவில்லை. எப்போதுமே மாணவர்களின் கலை, இலக்கிய படைப்பாற்றுத் திறனை ஊக்குவிக்கக்கூடிய சிறந்த ஆசிரியர்களை கொண்டிருந்த பாடசாலையாக மகா ஜனாக்கல்லூரி விளங்கியது. எனினும் இது நாளாந்த பாடசாலை பாடத்திட்டங்களுக்கு அப்பாற்பட்ட, ஆனால் ஒரு பிரயோசனமான வெளி வேலை. ஒரு இதழையாவது வெளியிட்ட பின்னர், வெளிவந்த இதழை காண்பித்து பணம் சேகரித்தல் என்பது ஓரளவு சுலபமான காரியம்.

சஞ்சிகை ஒன்றினை வெளியிடுவோமென நாங்கள் நால்வரும் கூடி முடிவெடுத்துவுடனேயே பணத்தை நாங்கள் சுலபமாக சேர்த்துவிடுவோமென ஏதோவகையில் நாங்கள் குருட்டுத்தனமான நம்பினோம்.

பணமிருந்தால் மாத்திரம் சஞ்சிகையை வெளியிட்டுவிடலாமா? தரமான ஆக்கங்கள் தேவையல்லவா? அதனையும் ஒருவாறு திரட்டினோம். உள்நாட்டு யுத்தம் முழுமையாக ஆரம்பிக்காதிருந்த காரணத்திருந்தால் சிறு சஞ்சிகைகளில் எழுதுவதற்கு அன்று பல எழுத்தாளர்கள் இருந்தார்கள். எமக்கு அப்போது மட்டுப்படுத்தியிருந்த சில தொடர்புகளினூடாக ஒருவாறாக சில நூறு ரூபாய்களை திரட்டி, அதனை முன்பணமாக அளவெட்டி ஜெயா அச்சகத்தில் செலுத்தியே, நாம் எமது முதல் இதழுக்கான வேலையை ஆரம்பித்தோம். 1980 ஆண்டு ஏப்ரல் மாதத்தில் முதலாவது 'புதுசு' வெளிவந்தது. ஒரு பிற்பகல் நேரத்தில் முதலாவது இதழுக்கான பணி முடிந்து, சந்தோசத்தின் உச்சியில் நாங்கள் ஜெயா அச்சகத்தின் வாசலில் நின்று கொண்டிருந்தோம். அப்போது எமது மதிப்புக்குரிய ஆசிரியர் மயிலங்கூடலூர் பி. நடராசன் மாஸ்ரர், அம்பனை – அலுக்கை வீதியில் அலுக்கை நோக்கி சென்று கொண்டிருந்தார். எங்கள் எதிரே எங்களை ஆசிர்வதிக்க எல்லா தகுதிகளும் நிறைந்த ஒரு குரு. அவரை 'சேர் சேர்' என்று கூவியழைத்தோம். சற்று தூ ரம் சென்று எங்களை திரும்பிப் பார்த்துவிட்டு, அவர் சைக்கிளை நிறுத்தினார். 'என்ன விசயம்' என கண்கள் விரிய வியப்போடு நின்ற அவரை நோக்கி ஓடிச்சென்று முதலாவது இதழை நீட்டினோம். தனது இரு கைகளாலும் இதழை வாங்கி அவருக்கேயுரிய புன்னகையோடு சற்றுப்புரட்டி பார்த்துவிட்டு சைக்கிளின் முன்னால் தொங்கிக்கொணடிருந்த பிரம்பு பெட்டியினுள் வைத்தார். பின்னர் தனது நாசனல் சட்டை பைகளில் இரு கைகளையும் விட்டு துழாவி, தாளாக சில்லறைகளாக இருந்த பணம் முழுவதையும் எம்மிடம் தந்து விடைபெற்றார். இப்படித்தான் புதுசுவின் முதலாவது இதழ் வெளியிடப்பட்டது என்பதை ஒருபோதும் மறக்க முடியாது.

முதலாவது அடியெடுத்து வைத்தல் என்பதுதான் மிகவும் கடினமான பணி. ஒவ்வொரு இதழ் வெளியிடுவதற்கும் விளம்பரத்தை மாத்திரம் நம்பியிருக்க முடியாது, விற்பனை செய்யும் பணமும் அடுத்த இதழுக்கான அடிப்படையாக இருக்க வேண்டுமென்றே நாங்கள் ஆரம்பத்தில் எண்ணியிருந்தோம். ஆனால் நடைமுறையில் நிலைமை அப்படியிருக்கவில்லை. இலக்கிய சஞ்சிகையொன்றினை வெளிக்கொணர எங்களால் முடிந்தபோதிலும் அதனை விற்று பணமாக்க எங்களால் முடியவில்லை. அச்சக செலவினைக் குறைப்பதற்காக 'பைண்டிங்' வேலைகளை நாங்களே செய்தோம். எனினும் அடுத்து வந்த ஒவ்வொரு இதழுக்கான செலவை ஈடுசெய்ய விளம்பரத்திலும் தங்கியிருக்க வேணடியிருந்தது. விளம்பரங்களுக்கும் நன்கொடைகளுக்கும், பின்னர் புதுசுவின் விற்பனைக்கும் சபேசனின் தனிப்பட்ட

அறிமுகங்கள், செல்வாக்குகள் பெரிதும் துணை புரிந்தன. முக்கிய புள்ளிகளை அவனுக்கு தெரிந்திருந்தது. அந்த சிறுவயதிலேயே அவர்களிடம் எமது சஞ்சிகையைப்பற்றி விபரித்து, புதுசுவுக்கு பணமாக வரவு வைப்பான். புதுசுவை விநியோகிப்பதிலும் வல்லவன். 'புதுசு' நிதி சேகரிப்பதற்கென 1980 ஆண்டின் பிற்பகுதியில் மகாஜனாக்கல்லூரியில் மூன்று நாடகங்களை மேடையேற்றினோம். அதனை விளம்பரம் செய்வதற்கு பல வர்ணங்கள் கொண்ட பெரியளவிலான சுவரொட்டிகள் அடித்தால் நல்லதென கருதினோம். ஆனால் அதற்கு கணிசமான தொகை தேவைப்பட்டது. சுவரொட்டிக்கான முழுச்செலவைப் பொறுப்பேற்பதற்கு சபேசன் தெல்லிப்பளை POLY ரியூசன் உரிமையாளரை மிகவும் துணிச்சலாக அணுகி சம்மதிக்க வைத்தான். அவனுக்குள்ளிருந்த விஷேச சாதுரியத்திற்கு இது ஒரு சிறிய உதாரணம். இந்த செயல் - அவனுக்கிருந்த செல்வாக்கு - அந்த காலத்தில் என்னை மிகவும் வியக்க வைத்தது. புதுசுவின் தேவைக்காக இன்னொரு தடவை, சபேசன் வீட்டிற்கு பின்புறமாக இருந்த வெறுந்தரையினை கட்டணம் செலுத்தும் சைக்கிள் தரிப்பிடமாக பயன்படுத்தி, மகாஜனாக்கல்லூரியில் நடந்த நிகழ்வொன்றிற்காக வருகைதந்த பார்வையாளர்களிடம் நிதி வசூலித்தோம். இப்படி, இப்படி எத்தனையோ சுவாரசியமான நிகழ்வுகளை அடுக்கிக்கொண்டே போகலாம்.

'புதுசு' இதழினை வெளியிட ஆரம்பித்த பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக நாங்கள் சபேசனின் உள்வீட்டு பிள்ளைகளானோம். ஏற்கனவே சபேசன் வீட்டை நிறைத்திருந்த மகாஜ(ச)னன்களோடு நாங்களும் சேர்ந்து கொண்டோம். சபேசனது வீடும் அவனது தாயும் சகோதரிகளும் எங்கள் மூவரையும் எப்படி உபசரித்தார்கள் என்பதை வார்த்தைகளால் சொல்லியடங்காது. பாடசாலை படிப்பைவிட்டு எங்களுடன் சுற்றி திரிகிறானென்று அவர்கள் இடையிடையே எங்களுடன் செல்லமாக கோபிக்கவும் செய்தார்கள். அவனது சின்னண்ணை வெளியூரில் வேலை பார்த்தார். அவர் விடுமுறையில் வீட்டிற்கு வந்து நின்றாலும் சபேசனை நெருங்குவது கொஞ்சம் கஸ்டம். 'புதுசு' காலகட்டத்தினை மீட்டுப்பார்த்தால் என்னைப்போலவே மற்றவர்களுக்கும் சபேசனது வீடும் உறவுகளும் முக்கிய கதாபாத்திரங்களாக இருக்குமென நான் நம்புகிறேன்.

புதுசுவின் சில இதழ்களின் வருகையோடு நாங்கள் நால்வரும் படைப்பாளிகளாக வளர்ந்தோம். எங்களுக்கு பலரது அங்கிகாரங்களும் கிடைத்தன. தொடர்புகள் பெருகின. இதனால் எங்களின் உலகம் விரிந்தது. பிஞ்சில் பழுத்தவர்களானோம். இலங்கை அரசுக்கெதிராக ஆயுதப்போராட்டத்தை ஆரம்பித்திருந்த தமிழ் தேசியவாத இயக்கங்களை சார்ந்தவர்கள் மற்றும் இலங்கை அரசுக்கெதிராக ஆயுதப்போராட்டத்தை ஆதரித்த இடதுசாரி அமைப்புகளை சார்ந்தவர்கள் எங்களை அணுகினார்கள். உரையாடினார்கள். படைப்பாளிகளை வென்றெடுத்து போராளிகளாக உருவாக்கினால், தமது அமைப்புகளுக்கு பலம்

சேர்க்குமென்பதை அவர்கள் வரலாற்றிலிருந்து கற்றுக்கொண்டிருந்தார்கள். இவ்வாறே மறைந்த தோழர் விசுவானந்ததேவனும் 1980 ஆண்டிலிருந்து எங்களுக்கு பழக்கமானார். இலக்கிய வாசிப்பினூடாக அப்போது எங்களுக்கென்றொரு ஒரு சமூகப்பார்வை உருவாகியிருந்தது. எங்களிடம் அப்போது நிலவிய கருத்தோட்டம் சுத்த இராணுவக் கண்ணோட்டம் கொண்ட தமிழ் தேசியவாத இயக்கங்களை முற்றுமுழுதாக நிராகரித்திருந்தது. இதனால் தோழர் விசுவானந்ததேவன் அங்கம் வகித்த தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி, பின்னர் அவர் ஸ்தாபித்த தமிழீழத் தேசிய விடுதலை முன்னணி (N.L.F.T) என்ற அமைப்புகளின் கருத்துக்களுடன் எங்களுக்கு ஒத்துப் போகக்கூடியதாக இருந்தது. 1986 களில் தமிழீழத் தேசிய விடுதலை முன்னணியின் முழுநேரச் செயற்பாட்டாளானாக சபேசன் இருந்தபோது, யாழ்ப்பாணக் குடாநாடு தமிழ் தேசியவாத இயக்கங்களின் முற்றுகைக்குட்பட்டு காட்டுமிராண்டித்தனம் அதிகரித்திருந்தது. இதனால் மக்களை நேசித்த போராளிகள் செய்வதறியாது இருந்தனர். சில மாதங்கள் தலைமறைவு வாழ்க்கை வாழவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாக்கப்பட்ட சபேசன், பின்னர் பிரித்தானியாவிற்கு இடம்பெயர்ந்தான்.

ஏழு வருடங்களில் 11 இதழ்கள் மாத்திரமே வெளிவந்து 'புதுசு' 1987 ஆண்டில் நின்று போய்விட்டது. அப்போது நாங்கள் நால்வரும் நான்கு வெவ்வேறு நாடுகளில் சிதறிப்போயிருந்தோம். இலங்கையில் திக்குத்திசை தெரியாத யுத்தம் உக்கிரமாக நடந்த அந்த காலகட்டத்தில், 'புதுசு' சஞ்சிகையை ஆரம்பித்தபோதிருந்த வேட்கையும் எங்களிடையே செத்துப்போயிருந்தது. இந்த இரண்டுமே 'புதுசு' நின்று போனதிற்கான முக்கியமான காரணங்கள். ஆனால் 'புதுசு' சஞ்சிகையை உருவாக்கி நிர்வகித்த அனுபவங்களில் எங்கள் ஆளுமைகள் பல பரிமாணங்களில் உயர்ந்திருந்தன என்பதை எங்களில் எவருமே மறுக்க முடியாது. இன்றும் நாங்கள் புதுசுவால் அடையாளப்படுத்தப்படுகிறோம். புதுசுவால் புடம் போடப்பட்டுள்ளோம். பத்திரிகைத்துறை எமது வாழ்க்கையின் ஓர் அங்கமாகிவிட்டது. பிரித்தானியா புறப்படுவதற்கு முன்னர், 1986-ம் ஆண்டில் சபேசனின் 'இனி வரும் காலம்' என்றதொரு கவிதைத்தொகுதி வெளியாகியிருந்தது. அதன் பின்னர் இலண்டனில் பனிமலர் சஞ்சிகையின் பிரதான ஆசிரியராக இருந்தான். 2003-ம் ஆண்டில் புதுசுவில் வெளிவந்த அனைத்து கவிதைகளையும் சேர்த்து 'அமைதி குலைந்த நாட்கள்' என்ற தலைப்பில் கவிதைத்தொகுதி ஒன்றினை வெளியிட்டான். சபேசனின் இந்த முயற்சி 'புதுசு' நின்று பதினாறு ஆண்டுகளின் பின்னர் இலக்கியப்புதையல் ஒன்றினை தோண்டியெடுத்து எங்கள் முன்னே வைத்தமாதிரி இருந்தது.

சபேசனின் ஐம்பதாவது வயதில், அவனுடான எனது உறவில் எனது நினைவில் இருப்பவற்றில் ஒரு சிறு பகுதியையே நான் எழுதியுள்ளேன். இதன் அர்த்தம், பல விடயங்களை இந்த சந்தர்ப்பத்திற்கு

பொருத்தமற்றதென தவிர்த்துள்ளேன். அவனை நான் எனது வாழ்வில் ஒரு சக கல்லூரிமாணவனாக, பத்திரிகை சக ஆசிரியனாக, நல்லதொரு படைப்பாளியாக, நண்பனாக, அரசியல் தோழனாக தரிசித்துள்ளேன். எல்லாவற்றிற்கும் மேலாக அவன் எனது குடும்பத்தின் முக்கியமான ஓர் அங்கத்தினனாய் இருந்து வருகிறான். மறைந்துபோன எனது தந்தைக்கு நன்கு அறிந்தவனாவும் மிகவும் பிடித்தவனாகவும் இருந்திருக்கிறான் என்பது எனது நினைவுகளிலுள்ளது. அதுபோலவே எனது உடன்பிறப்புகளுக்கும் எனது இளமைக்கால நண்பர்களில் ஒருவனாக, என்றும் அவர்கள் நினைவில் நிற்பவனாக, அவன் திகழ்கிறான். தனிப்பட்ட விவகாரங்களில் என்னிடம் மிகவும் உரிமையெடுத்துக் கொள்வான். அதுதான் அவனுக்கும் எனக்கிருக்கும் நீண்டகால உறவின் வெளிப்பாடு. நான் மிகவும் சிக்கலான, இக்கட்டான, துயரமான கட்டங்களில் இருந்தபோதெல்லாம் எனக்கு துணையாயிருந்து, ஆசுவாசப்படுத்தி, தன்னால் முடிந்ததையெல்லாம் மனமுவர்ந்து செய்து என்னை தூக்கிவிட்டிருக்கிறான். இவைபற்றியெல்லாம் விலாவாரியாக நான் இந்த சந்தர்ப்பத்தில் சொல்லப்போவதில்லை. இலங்கையிலிருந்து பிரித்தானியா வரைக்கும் எப்போதுமே இடைவிடாத தொடர்பில் நாங்கள் இருந்து வருகிறோம். தொடர்பை பேணுதல் என்ற இந்த சிறந்த பண்பு சபேசனோடு கூடப்பிறந்தது.

சபேசனின் ஐம்பதாவது வயதை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் இந்த தருணத்தில் அவனது துணைவி மலர்விழி, குழந்தைகளான பொன்னி, பரிதி, சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள், மகாஜனாக்கல்லூரி பழைய மாணவர்கள், தோழர்கள் ஆகியோருடன் இணைந்து நானும் எனது குடும்பத்தினரும் சபேசனை வாழ்த்துகிறோம்.

பா.பாலசூரியன்
நெதர்லாந்து
மார்ச், 2014

***பிற்குறிப்பு:*** *சபேசனின் ஐம்பவதாவது பிறந்ததினத்தை கௌரவித்து வெளிவரவிருக்கும் சிறிய நூலுக்காக இககட்டுரையினை எழுதி முடித்த பின்னர், 2007 ஆண்டு சபேசனின் தாயாரின் மறைவையொட்டி வெளிவந்த சிறிய புத்தகம் எனது நினைவுக்கு வந்தது. அந்த நினைவு நூலில் நான் எழுதியிருந்தவற்றை படித்துப் பார்த்தேன். அவனது வீடு, உறவுகள், அவனது வீட்டில் மையங்கொண்டிருந்த எமது கலை, இலக்கிய, சமூக, அரசியல் ஈடுபாடு என்பவை பற்றியெல்லாம் எனது நினைவிலிருந்தவைகளை அந்த நூலிலும் பதிந்திருக்கிறேன். சபேசனின் தாயாரின் மறைவின் நினைவுகளில் சபேசனைப்பற்றியும் அதிகம் எழுதியிருப்பதாக இப்போது எனக்கு தெரிகிறது.*

---

பாலசூரியன் - மகாஜனக் கல்லூரி மாணவர்களாக இருந்தபோதே வெளியிட்டட - 'புதுசு' சஞ்சிகையின் ஆசிரியர்களான நால்வரில் ஒருவர். அரசியல், சமூக அக்கறையுடன் இன்னமும் செயற்படுபவர். நெதர்லாந்தில் குடும்பத்துடன் வசித்துவருகிறார்.

# சபேசா! உனக்கும் 50ஆம்?

நேற்றைக்குப் போல இருக்குது. உன்ரை வீட்டில் சைக்கிள் முழுசி முழுசி விட்டது. அம்மா, பேசப் பேச பொட்டுக்குள்ளாலை புதினம் பார்த்து, அக்காமார் தேத்தண்ணி தருவினம், விறாந்தையில் இருந்து விடுப்பங்கள் கதைச்சம். உன்ரை மனது போலவே உடம்பும் வளர்ந்திருக்கிது. **"சபேசா! உனக்கும் 50ஆம்"**.

எனக்குத் தெரியும் - நீ கவிதை எழுதினி என்று. கனக்கக் கூட்டம் போட்டனி என்று. வகுப்பு வகுப்பாய், பொக்கற்றுக்கை வைத்து **புதுசு** புதிசாய் புத்தகம் வித்தனி என்று. உன்ரை அரசியலை, நாங்கள் பார்த்துச் சிரிக்க, நீ எங்களைப் பார்த்துக் கொடுப்புக்கை சிரிச்சாய். இப்ப விளங்குது உன்ரை அந்த நேரத்து அருமை. **"சபேசா! உனக்கும் 50ஆம்"**.

மகாஜனா உனக்கு மதில். ஆனால் மகாஜனாவுக்கு நீயும் உன்ரை குடும்பமும் மதில். பள்ளிக்குப் படிக்கக் கனபேர் வந்திருக்கினம், போயிருக்கினம். ஆனால் நீயும் உன்ரை குடும்பமும் அங்குதான். ஆச்சரியம். ஆனால் அதிசியம். **"சபேசா! உனக்கும் 50ஆம்"**.

கள்ளம் கபடம் இல்லாத உன் மனம் போல பல்லாண்டு வாழ, 40 வருடம் பழகிய பாக்கியத்தை மனதில் இருத்தி வாழ்த்துகின்றேன்.

சி கணேசலிங்கம்
துணைத் தலைவர், மகாஜன பழைய மாணவர் சங்கம் (ஐஇ)

---

சபேசனின் வகுப்புத் தோழன். பாரீஸ் மகாஜனாவின் முன்னாள் தலைவர். லண்டன் மகாஜனாவின் முன்னாள் செயலாளர்.

# எனது தம்பி சபேசன்

என் மனதில் இப்போதும் நினைவில் இருக்கும் நிகழ்ச்சி தம்பி சபேசனின் பிறப்பு. அம்மாவை இணுவில் வைத்தியசாலையில் பிள்ளைபெறுவதற்காக அனுமதித்திருக்கின்றார்கள். நான் என்னுடைய பாடசாலை முடிந்தபின் நேராகவே வைத்தியசாலைக்குச் சென்றேன். தெல்லிப்பழைச் சந்தியில் பஸ் பிடிப்பதற்கு முன்பாக பத்திரிகைகள் விற்கும் கடைக்குச்சென்று அன்று வந்திருந்த கல்கி சஞ்சிகையை வாங்கிச் சென்றேன். வேறு பத்திரிகைகளும் வாராவாரம் ஓடருக்கு வாங்குவதாயினும் அன்று நான் கல்கியை மாத்திரமே வாங்கினேன். காரணம் நான் தொடராக விரும்பி வாசித்த நா. பார்த்தசாரதி எழுதிய ‘பொன்விலங்கு; தொடர் நாவலின் கடைசி அத்தியாயம் அந்த இதழில் வந்திருந்தது. அம்மாவை பேற்றுக்காக உள்ளே அழைத்துச் சென்றுவிட்டார்கள். பதினான்கு வயதேயான நான் அம்மாவின் கட்டிலில் படுத்திருந்து அந்தக் கடைசி அத்தியாயத்தை வாசித்து முடித்தேன். அந்த வாசிப்பு முடிந்து 50 வருடங்களாகிவிட்டது. அன்று - 1964ம் ஆண்டு மார்ச் மாதம் 20ம் திகதி - பிறந்த சபேசனுக்கும் 50 வயதாகிவிட்டது.

என்னைப் போலவே சபேசனுக்கும் தகப்பனாரில் மிக நெருங்கிய ஈர்ப்பு. அவருடைய அரசியல், தொழிற்சங்க ஈடுபாடும் அதன்மூலமான வாசிப்புப் பழக்கமும் என்னைத் தொற்றியது போலவே சபேசனையும் சிறுவயது முதற்கொண்டே ஈடுபட வைத்தது. தந்தையாரின் சமசமாஜக் கட்சி ஈடுபாடும் அதன் தலைவர்கள் மேல் கொண்ட விசுவாசமும் தீவிரமானது. தேர்தல் காலங்களில் இடதுசாரி வேட்பாளர்களின் தோதல் நிலையங்களாக எமது வீடு இருந்தது. கூட்டணி அரசியலினால் 1965, 1970, 1975 தேர்தல்களில் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர்களை தகப்பானார் விரும்பாமலே ஆதரித்தார். நான் அரசியலில் தீவிரமாக இயங்கி 1965 – 1975 வரையான பத்தாண்டுகள் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து தீவிரமாக இயங்கிய வேளையில் சிறுவனான சபேசன் வீட்டிலும் தெல்லிப்பழையிலும் நடந்த கூட்டங்களை எல்லாம் பார்த்தான். இந்தக் காலகட்டங்களில் வீடு நிறைய புத்தகங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் என நிறைந்திருக்கும். சாதாரண தினசரி, வாராந்த பத்திரிகைகளுடன் மல்லிகை, வெள்ளி உட்பட இலங்கையில் வெளிவந்த அனைத்துச் சஞ்சிகைகளும் சோவியத்நாடு இதழும் தேசாபிமானி பத்திரிகையும் சபேசனின் வாசிப்புக்கு உரமூட்டின. இவைதான் சபேசன் என்கின்ற இன்றைய கதாநாயகனின் ஆரம்பம்.

சபேசன் எழுதி 1986இல் வெளியிட்ட **‘இனி வரும் காலம்’** என்கின்ற கவிதைத் தொகுதியில் அவன்

பின்வருமாறு எழுதுகிறான் - **என்னுடைய மூத்த அண்ணன் அதன் பிறகு நிறைய புத்தகங்களை வாங்கி வந்து தருவார், அவரது ஊக்கமே என்னை இலக்கியத்துறையினுள்ளும் அரசியலினுள்ளும் தள்ளிற்று.**

எழுபதுகளில் தமிழ் இளைஞர்கள் வன்முறை அரசியலில் ஈடுபடத் தொடங்கினார்கள். அவர்களின் துப்பாக்கிகள் என்னைப் போன்ற அன்றைய ஐக்கிய முன்னணி அரசின் பங்காளர்களாக இருந்தவர்களை நோக்கித் திரும்பின. எனவே லண்டனில் படித்துக் கொண்டிருந்த எனது நண்பர்கள் உதவ 1975இல் நான் நாட்டைவிட்டு வெளியேறி இங்கு வந்தேன். அப்போது சபேசனின் வயது பதினொன்று. அவனின் பன்னிரண்டாம் வயதில் (1976) எமது தகப்பனார் திடீரென காலமானார். எம்மையெல்லாம் மிக பாதித்த நிகழ்வு அது. அப்போதிலிருந்து சபேசனால் அவனுக்கு நெருக்கமான நானும் தந்தையாரும் அருகில் இல்லாமலே வாழவேண்டி இருந்தது. எமது தந்தையார் எம்மை மிகச் சுதந்திரமாக வாழவும் வளரவும் அனுமதித்தார். இதனாலேயே தாயாரின் கட்டுப்பாடுகளை மீறி சபேசன் தன்னை வளர்த்துக் கொள்ள முடிந்தது.

நான் இங்கு வந்தபின்பாக வாராவாரம் மிக நீண்ட (A4-5 பக்கங்கள்) கடிதங்களை எழுதி வீட்டிற்கு அனுப்புவேன். அந்தக் கடிதங்களின் பெருவாரியான செய்திகள் சபேசனுக்குரிய அரசியல், விளையாட்டு சம்பந்தமானவையே. விளையாட்டுச் செய்திகளில் லிவர்பூல் உதைபந்தாட்டச் செய்திகள் அதிகம் இடம்பெறும். இவற்றை நான் எழுதுவதற்கு பண்டிட் நேரு சிறைச்சாலைகளில் இருந்து மகள் இந்திராவுக்கு எழுதிய கடிதங்கள் உந்துசக்தியாக இருந்தன. இவை எல்லாம்தான் நாங்கள் இருவரும் பலவிடயங்களில் ஒத்த கருத்துக்களைக் கொண்டிருக்கக் கரணங்களாகியதாக நினைக்கின்றேன்.

எனக்கும் சபேசனுக்கும் இடையேயான தம்பி சிறிபாலகெங்காதரன் (ரவி) உதைபந்தாட்டம், ஹொக்கி, கிரிக்கெட் என்ற விளையாட்டுக்களில் மகாஜனக் கல்லூரி, யாழ் மாவட்டத் தெரிவுக்குழுக்கள், இலங்கை பொலிஸ் தெரிவுக்குழுக்கள் என்பவற்றை பிரதிநிதித்துவப்படுத்திய சிறந்த விளையாட்டு வீரன். அவனுடைய விளையாட்டை பார்ப்பதுவும் எங்கள் இருவரையும் விளையாட்டுக்களின் தீவிர ரசிகர்களாக மாற்றின. 60களிலும் 70களிலும் மகாஜனாவின் விளையாட்டு வெற்றிகளும் எம்மை ரசிகர்களாக்கிய நிகழ்வுகளாகும்.

நாங்கள் இருவரும் தீவிரமான இலக்கிய ஆர்வலர்கள். சபேசன் இயற்கையாகவே எழுத்துத்துறையில் தடம்பதித்தவன். நான் அரசியல், மகாஜனா என கட்டுரைகளை எழுதி எழுத்துத்துறையில் ஓரளவு எழுதுபவன். இலங்கையில் மகாஜனாவினதும் இங்கே லிவர்பூலினதும் தீவிர ரசிகர்கள். அரசியலில் நாங்கள் இருவரும் இடதுசாரி அரசியல் சித்தாந்தத்தை சிறுவயது முதலே ஏற்று இயங்குபவர்கள்.

ஆனாலும் தமிழரின் பிரச்சனைகளுக்கான தீர்வுகள் குறித்த எங்களது அபிப்பிராய பேதங்களுக்கு மத்தியில் தீவிரமாக இயங்குபவர்கள். இந்த ஐம்பது ஆண்டுகளும் எந்த அபிப்பிராய பேதங்களும் ஏற்பட்டதில்லை. கடந்த முப்பதாண்டுகால தமிழரின் அரசியல், எதிர் கருத்துக் கொண்டவர்களை (சகோதரர்களே ஆனாலும்) பகைவர்களாகக் கருதுகின்ற சூழலை உருவாக்கித் தந்துள்ளது. எங்கள் இருவருக்குள்ளும் அப்படியான சூழ்நிலை என்றுமே ஏற்பட்டதில்லை. ஏன் மற்றவர்களிடம்கூட பழகக்கூடாத சூழல் எமக்கு ஏற்படவில்லை.

என்னுடைய சிறுவயது நண்பர்களில் பலர் இலங்கை, கனடா, சிங்கப்பூர், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து என வாழ்ந்து வருகின்றார்கள் அவர்கள் எல்லோருமே சபேசனை, இன்றுவரை தங்கள் தம்பியாகவே கருதிப் பழகுகின்றார்கள். அதுபோலவே இங்குள்ள எனது நெருங்கிய நண்பர்களும் சபேசனுடன் பழகுகின்றார்கள். சபேசனும் இவர்கள் எல்லோருடனும் எனக்குத் தருகின்ற அன்பைச் செலுத்தி பழகிவருவது மகிழ்ச்சிக்குரியது. இதைப்போலவே சபேசனின் நண்பர்களும் என்னுடன் அன்பாகப் பழகிவருகின்றார்கள். அமைச்சர், டக்ளஸ் தேவானந்தாவை சபேசனின் நண்பனாகவே எனக்கு அறிமுகமானார். அதுபோலவே என்னுடைய நண்பராக, அமைச்சர் வாசுதேவ நாணயக்காராவை தனது திருமணத்திற்கு சபேசன் அழைத்திருந்தான்.

என்னைவிட பதிநான்கு வயது சிறியவன். இன்னமும் அவனுடைய பங்களிப்பு பலதுறைகளிற்குத் தேவை. குறிப்பாக அவன் எழுத வேண்டும். எங்கள் இருவரினது அரசியல், சமூக, சமய கருத்துக்களில் நிறையப் பேருக்கு உடன்பாடு இல்லை. ஆனாலும் நாம் எழுதுவதை பிரசுரிக்கவும், புத்தகமாக வெளியிடவும் நண்பர்கள் உள்ளனர். அதுபோலவே வாங்கவும் நண்பர்கள், உறவினாகள் உள்ளனர். அவனிடம் உள்ள - அறிவும் ஆற்றலும் கொண்ட - கருத்துக்கள் நூலுருப்பெறவேண்டும். செய்வானென நம்புகின்றேன்.

இந்த ஐம்பதாவது வயதில் ஏனைய சகோதரர்களுடன் இணைந்து வாழ்த்துகிறேன்

அண்ணன்

நாக சிறிகெங்காதரன்.

---

சபேசனின் மூத்த அண்ணர். இலங்கையிலும் இங்கும் 50 ஆண்டுகள் அரசியல், சமூகம், விளையாட்டு, இலக்கியம் என பல்வேறு துறைகளில் இயங்குபவர். மகாஜன பழைய மாணவர் சங்கத்தினதும் தமிழப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தினதும் முன்னாள் தலைவர்.

# அமைதி குலைந்த நாட்கள்

பேராசிரியர் எம் ஏ நு஡்மான் மே 2003இல் எழுதிய அறிமுகக்குறிப்புக்களில் இருந்து........

1980களின் தொடக்கத்தில் என்னை வியப்பில் ஆழ்த்திய இலக்கிய நிகழ்வுகளுள் ஒன்று புதுசு சஞ்சிகையின் வரவு. இதற்குப் பிரதானமான காரணம் இச்சஞ்சிகை க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர்கள் சிலரின் முயற்சி என்பதுதான். எனது அனுபவத்தில் - சில விதிவிலக்குகள் இருந்தாலும் - நமது பாடசாலை மாணவர்களின் நவீன இலக்கியப் பரிச்சயம், ஈடுபாடு, முதிர்ச்சி என்பன நம்பிக்கை ஊட்டுவதாக இருந்ததில்லை. நமது பாடசாலைக் கல்வியமைப்பு மாணவர் மத்தியில் இலக்கிய உணர்வை ஊட்டி வளர்ப்பதாக இல்லை என்பதே எனது பொதுவான நம்பிக்கை. ஆனால், புதுசு இதனை உடைத்துக்கொண்டு தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவர்களின் முயற்சியால் இலக்கிய முதிர்ச்சியுடன் வெளிவந்தமை ஒரு வியப்பூட்டும் நிகழ்வுதான்.

மகாஜனக் கல்லூரிக்கு ஒரு நீண்ட இலக்கியப் பாரம்பரியம் இருக்கின்றது என்பதையும் நாம் இங்கு மனங்கொள்ள வேண்டும். பாவலர் துரையப்பாபிள்ளை முதல் இன்றைய பாலசூரியன் வரை இம்மரபு தொடர்கின்றது. அ.செ.முருகானந்தம், மஹாகவி, அ.ந.கந்தசாமி முதலிய பல ஈழத்து இலக்கிய முன்னோடிகள் இக்கல்லூரியில் பயின்றவர்கள். இவர்களது இலக்கிய விகசிப்புக்கு நமது கல்வியமைப்பை விட, இவர்களது தனிப்பட்ட ஆர்வம், இலக்கிய ஈடுபாடும் அர்ப்பண உணர்வும் கொண்ட ஆசிரியர்களின் தூ ண்டுதல், வெளிச்சூழலின் தாக்கம் என்பன பிரதான காரணிகளாக அமைந்தன எனில் அது தவறாகாது.

புதுசு முதல் இதழ் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர்களான நா.சபேசன், பாலசூரியன், அ.ரவி, இளவாலை விஜயேந்திரன் ஆகியோரை ஆசிரியர்களாகக் கொண்டு 1980 ஜனவரியில் வெளிவந்தது. தமது மாணவப் பருவத்தில் புதுசு இதழைத் தொடங்கிய இந்நால்வரும் இன்று புலம்பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளில் வாழ்கின்றனர். புலம்பெயர்ந்த சூழலிலும் ஈழத்து இலக்கியத்தை வளப்படுத்தி வருகின்றனர். அ.ரவி இன்று முக்கியமான சமகால ஈழத்துச் சிறுகதை ஆசிரியர்களில் ஒருவராக வளர்ச்சி பெற்றுள்ளார். இளவாலை விஜயேந்திரன் புலம்பெயர் சூழலிலும் தன்னை ஒரு தனித்துவமான கவிஞனாக நிலைநிறுத்திக் கொண்டவர். பாலசூரியன் நா.சபேசன் இருவரும் குறிப்பிடத்தகுந்த கவிஞர்களாகத் தம்மை இனங்காட்டிக் கொண்டவர்கள்.

*குறிப்பு: புதுசு—பதினொரு இதழ்களில் வெளிவந்த கவிதைகள் அனைத்தையும் 'அமைதி குலைந்த நாட்கள்' என்ற பாலசூரியனின் கவிதைத் தலைப்பில் 2003 மே மாதம் நூலாக வெளியிடப்பட்டது.*













